கொடுத்து விட முடியாது. அந்த அளவுக்கு இடம் இருப்பதில்லை. இடம் இல்லாத காரணத்தால்தான் இப்படி சில நியதிகளை வைத்திருக்கிறோம். இன்னொன்று குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கி ஓய்வு பெறுபவர்களின் குடும்பங்களுக்கும் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அது நல்ல யோசனையாக இருந்தாலும் கூட யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்சினை வந்து விடும். அதிலே பிறகு அரசாங்கம் அவர்களுக்கு சலுகை காட்டியது, இவர்களுக்கு காட்டியது என்ற பிரச்சினையெல்லாம் வந்து விடும். அதனால் தகுதியை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஐ.டி.ஐ. ஆக இருந்தாலும் சரி, டிரைவர்ஸ் டிரையினிங் ஸ்கூலாக இருந்தாலும் சரி அந்த தொழிலாளர்களுடைய குடும்பத்திற்கு மட்டுமே வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அவர்கள் மட்டுமே அந்த டிரெயினிங்கில் சேர்ந்து பயிற்சி பெறலாம். அதைப்போன்று கல்லூரிகளிலே, போக்குவரத்து கழகங்களின் சார்பாக நடத்தப்படுகிற என்ஜினீயரிங் கல்லூரியில் 40 சதவீதமும், மருத்துவக் கல்லூரியிலே 33 சதவீதமும் ஒதுக்கி அவர்கள் தகுதியை உயர்த்துவதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம்—கோவளம் இடையேயுள்ள பழுதடைந்த பாலம்.

634—(*வினா எண் 7000) **திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம்—கோவளம் இடையே பழுதடைந்துள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலப் பணியானது நிரந்தர சீராக்கப்பணியின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுவிட்டது.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கு சீரமைப்பிற்காக அரசு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த சீரமைப்புக்காக ஏறக்குறைய 1 1/2 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் புதுப் பாலம் அமைப்பதற்காக 25 லட்சம் ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டிருந்தாலும் நிதிப் பிரச்சினை காரணமாக உடனே எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. எதிர்காலத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 மே 8]

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம் உல்லாசப் பயணிகளை கவர்கின்ற இடமாக இருக்கிறது. குறிப்பாக கோவளம் மிகவும் அதிகமாக உல்லாசப் பயணிகளை கவர்ந்திருக்கிறது. இப்படிப் பட்ட இடங்களுக்கு போகிற போது அந்த உல்லாசப் பயணி களுக்கு மிகவும் சிரமம் உண்டாகிறது. அதைத் தவிர்க்கின்ற வகையில் இப்படிப்பட்ட பாலங்களை உடனுக்குடன் சீரமைப்பு செய்ய ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு உல்லாசம் இருக்கிறதோ அவை எல்லாம் உல்லாசத்திற்கு ஏற்ற இடம் தான் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு போய் பார்த்து விட்டு வந்து கேள்வி கேட்பதில் இருந்தே அது நல்ல இடம் தான் என்று புரிகிறது. இருந்தாலும் நிதிப் பிரச்சனை என்பது எல்லா இடங்களுக்கும் இருப்பது போன்று தான் இதற்கும் இருக்கிறது. எனவே எது எது அவசியமோ அதை எல்லாம் லிஸ்ட் அவுட் செய்து எடுத்துக்கொண்டு வருகிறோம். அதன் முக்கியத்துவம் கருதித்தான் 25 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்ற கணக்கில் ஒரு திட்டம் தீட்டி வைத்திருக்கிறோம். ஆனால் பணம் இல்லாத காரணத்தால் இந்த ஆண்டு ஒதுக்க முடிய வில்லை. எதிர் காலத்தில் பார்க்கலாம்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லு கின்ற சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. அங்கே பல ஆக்கிரமிப்பாளர்கள் சாலையிலேயே வீடு கட்டிக் கொண்டிருக் கிறார்கள். உல்லாசப் பயணிகள் அதிகமாக செல்லுகின்ற சாலை யாக இருப்பதால் அதை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அவற்றை அகற்றிவிட்டு முறைப் படி அகலப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கலாம். இதனை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வாய்ப்பு இருக்காது என்று நினைக்கிறேன். எனவே போக்குவரத்திற்கு உகந்த வகையில்— உல்லாசப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள், அந்தச் சாலையை சீர்படுத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கையெடுக்கலாம்.

தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரி இரயில் பாதை.

635. (*வினா எண் 13213) திரு. வே. இரா. ஜெயராமன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரி இரயில் பாதை ஏற் படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS